**தலைப்பு 224 – இலங்கை வான்படை**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை வான்படையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை வான்படையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 03 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை வான்படையின் விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 02 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கிணங்க தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை வான்படையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை வான்படையால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் இலங்கை வான்படையால் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை வான்படையின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி இலங்கை வான்படையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) உப பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுற்றுலா விடுதி மற்றும் பண்ணைகள் உள்ளடங்கலாக வருமானமீட்டும் செயற்திட்டங்கள் மூலம் மீளாய்வாண்டின் போது ஈட்டிய வருமானம் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | இலங்கை வான்படையின் மனித மற்றும் பௌதீக வளங்களை பயன்படுத்தி வணிக அடிப்படையில் செயற்படுத்தப்படும் இச் செயற்திட்டங்களின் நிதிச் செயலாற்றல் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | இச் செயற்திட்டங்களிலிருந்து கிடைக்கும் வருமானம் நலன்புரி நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படுவதனால் அவை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதில்லை. |

### 1.6.2 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இலங்கை வான்படையின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக இலகுவான | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பந்தியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட | பாராளுமன்றத்தில் அட்டவணைப்படுத்தப்பட்ட பின்னர் வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரதியொன்று வழங்கப்படும் |

| | | |
|---|---|---|
| உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டிய போதிலும் அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். | என அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 1.6.3 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 136, 137 மற்றும் 138 இனை பின்பற்றாமல் இலங்கை வான்படையின் நலன்புரி நிதியத்திற்கு 5 உறுதிச்சீட்டுக்கள் மூலம் ரூபா 2.93 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 138(3) இன் பிரகாரம் செலவினங்களை சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தரால் செலவினங்களை சான்றுறுதிப்படுத்துவதற்கு முன்னர் மேற்பார்வை செய்யப்பட வேண்டும். மேலும் பொதுத் திறைசேரியால் வருடாந்த ஒதுக்கீட்டின் கீழ் இலங்கை வான்படைக்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டில் நலன்புரி நிதியத்திற்கு செலுத்துவதற்கான அங்கீகாரத்தை வழங்குவது பொருத்தமற்றதாகும். | இலங்கை வான்படையின் நிறைவேற்று நலன்புரி நிதியத்தால் வான்படையின் அவசர செலவினங்களை பூர்த்தி செய்வதற்காக இது மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் அரசாங்க கேள்வி நடைமுறைகளிற்கிணங்க மீள்நிரப்பல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. விலைச்சிட்டைகளுடன் முறையாக தயாரிக்கப்பட்ட கோவைகளை சமர்ப்பிப்பதன் மூலம் நிதிப் பணிப்பாளர் ஊடாக காசு மீள்நிரப்பல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| (ஆ) 2011 நவம்பர் 30 ஆம் திகதிய 852 ஆம் இலக்க வான்படை பணிப்புரையின் 5 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் இலங்கை வான்படையின் தலைமை அலுவலகங்கள், பல்வேறு முகாம்கள் மற்றும் அலகுகளில் உள்ளக நிதியங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. நிதியங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளிற்காகவும் உரிய நிதியங்களால் அமுல்ப்படுத்தப்பட்ட இலாபம் உழைக்கும் செயற்பாடுகளுக்காகவும் இலங்கை வான்படையின் பௌதீக மற்றும் மனித வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் நிதிப்பிரமாணம் 154 இன் பிரகாரம் இந்த உள்ளக நிதியங்கள், நியதிச் சட்ட நிதியங்களாக ஸ்தாபிக்கப்பட்டிருக்காததன் விளைவாக அத்தகைய நிதியங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகள் பொதுத் திறைசேரி மற்றும் பாராளுமன்றத்தால் கண்காணிக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் 2016 யூன் 24 இல் நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவின் கூட்டத்தில் வழங்கப்பட்ட பணிப்புரைகளின் பிரகாரம் உள்ளக நிதியங்களால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளிலிருந்து ஈட்டப்படும் இலாபத்தின் செயற்பாடுகள் தொடர்பாக பாராளுமன்றத்தின் மேற்பார்வையை ஒழுங்குபடுத்துவதற்கு பொறிமுறையொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். | 852 ஆம் இலக்க வான்படை பணிப்புரையின் கீழ் உள்ளக நிதியங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான வருடாந்தக் கணக்காய்வுகள் இலங்கை வான்படையின் நிறைவேற்றுக் கணக்காய்வுப் பிரிவால் மேற்கொள்ளப்படுகின்றன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டிற்கு விமானத்தை வாடகைக்கு விடுதல் மீதான வருமானம் ரூபா 220 மில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் பின்னர் இது இலங்கை வான்படையால் ரூபா 100 மில்லியனாக திருத்தம் செய்யப்பட்டிருந்தது. அத்துடன் மீளாய்வாண்டின் போது ரூபா 128 மில்லியன் தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. சேகரிக்கப்பட்ட வருமானம் | அரசாங்க வருமானம் தொடர்பான நிதி முகாமைத்துவத்தை பலப்படுத்துவதற்காக நிறுவனத்தால் உழைக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் வருமானத்தை சரியாக மதிப்பீடு செய்வது அவசியமாகும். | இலங்கை வான்படையின் விமானங்களின் எண்ணிக்கை மற்றும் வணிக விமான செயற்பாட்டு நடவடிக்கைகளிற்கான அவற்றின் பொருத்தத்தன்மை என்பன குறைவடைந்திருந்ததன் விளைவாக விமானங்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட வேண்டியிருந்தன. |

| | | |
|---|---|---|
| திருத்தம் செய்யப்பட்ட மதிப்பீட்டில் 128 சதவீதமாக காணப்பட்டது. | | |
| (ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 20.03.02.16 ஆம் இலக்க விமானத்தை வாடகைக்கு விடுதல் வருமான கணக்கின் பிரகாரம் ரூபா 13.17 மில்லியன் கூட்டுமொத்தமான வருமானம் நிலுவையாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 10.82 மில்லியன் கூட்டுமொத்தமான வருமானம் 4 ஆண்டுகள் தொடக்கம் 15 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கு மேலாக நிலுவையாக காணப்பட்டது. | நிதிப்பிரமாணம் 175(2) இன் பிரகாரம் வருமானத்தை காலந்தவறாது சேகரிப்பதற்கு வருமான சேகரிப்பு உத்தியோகத்தர் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். | அறவிடப்பட வேண்டிய மீதிகளிற்காக நினைவூட்டல்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அறவிடப்பட முடியாதவையாக பரிந்துரை செய்யப்பட்ட மீதிகளை பதிவளிப்பதற்கு பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) உண்மையான தேவைப்பாட்டை இனங்காண்பதற்கு முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் நிதிப்பிரமாணம் 66 இன் ஊடாக செலவினக் குறியீடுகளிற்கிடையே ரூபா 1,034.8 மில்லியன் நிதியேற்பாடுகள் வகைமாற்றம் செய்யப்பட்டிருந்தன. மேலும் ரூபா 728.1 மில்லியன் தொகையான மேலதிக ஒதுக்கீடுகள் குறைநிரப்பு மதிப்பீடுகள் ஊடாக பெறப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடுகளை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இலங்கை வான்படையின் கூட்டிணைந்த திட்டம், இலங்கை வான்படையின் தூரநோக்கு, பொதுத் திறைசேரி மற்றும் பாதுகாப்பு அமைச்சால் வழங்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன. கோரப்பட்ட ஒதுக்கீடு முழுவதும் பெறப்பட்டிருக்காததன் காரணமாக செலவின விடயங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்படாமல் நிதியேற்பாடுகள் வகைமாற்றம் செய்யப்பட்டிருந்தன. |
| (ஆ) ரூபா 5,513 மில்லியன் கூட்டுத்தொகையான மேலதிக நிதியேற்பாடுகள் 51 செலவின விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இது தேறிய ஒதுக்கீட்டில் 10 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. மேலும் | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடுகளை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விலைப்பட்டியல்களை பெறுவதில் காணப்பட்ட தாமதங்கள், கட்டுநிதிகள் போதியளவு காணப்படாமை, ஆண்டின் போது கொள்வனவுகள் மேற்கொள்ளப்படாமை, மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு நிபுணர்களின் |

| | | |
|---|---|---|
| மேற்குறிப்பிட்ட செலவின விடயங்களில் உள்ளடக்கப்பட்ட 7 செலவின விடயங்களிற்குரிய ரூபா 2,544 மில்லியன் கூட்டுமொத்தமான நிதியேற்பாடுகள் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தன. | | மதியுரையின் கீழ் விமானங்களின் திருத்தங்கள் பூர்த்தி செய்யப்படாமை போன்ற காரணங்கள் இந்த ஒதுக்கீடுகளில் சேமிப்புக்களை விளைவித்திருந்தன. |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2 செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டை விஞ்சி ரூபா 49.6 மில்லியன் தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் இலங்கை வான்படையால் மதிப்பீடு செய்யப்படாமல் வேறு 2 செலவின விடயங்களிற்காக ரூபா 3.2 மில்லியன் தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 94 உடன் இணங்குதல் வேண்டும். | இலங்கை வான்படையின் செலவின விடயங்களின் ஒட்டுமொத்த ஒதுக்கீட்டினை கருத்தில் கொள்ளும் போது இரண்டு செலவின விடய ஏற்பாடுகளை விஞ்சி கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன, கடப்பாடுகள் மூலம் பொறுப்புக்கள் விஞ்சப்பட்டிருந்தன. இது சேவை தேவைப்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததென அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 2.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து மாற்றப்பட்ட ஒதுக்கீடுகளை பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை வான்படையிடமிருந்து மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த வேலைகளிற்காக ஏனைய 05 வரிசை அமைச்சுக்கள் மற்றும் 03 திணைக்களங்களால் ரூபா 832 மில்லியன் தொகை இலங்கை வான்படைக்கு மாற்றப்பட்டிருந்தது. அதில் ரூபா 620 மில்லியன் தொகை மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒதுக்கீட்டில் சேமிப்பு 25.5 சதவீதமாக காணப்பட்டது. | ஒதுக்கீடுகளில் சேமிப்புக்கள் காணப்படுவதற்கான காரணங்கள் ஆராயப்பட வேண்டியதுடன் உரிய நோக்கங்களிற்காக இதனை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

## 2.5 முற்பணக் கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| உத்தியோகத்தர்களிற்கு மேற்கொள்ளப்பட்ட முற்பணங்களின் ரூபா 13.71 மில்லியன் தொகையான மொத்த மீதி 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக காணப்பட்டதுடன் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய முற்பண மீதிகள் தவிர உரிய நிலுவை மீதிகள் 01 தொடக்கம் 05 ஆண்டுகள் வரையான காலவீச்சிற்கு மேலாக காணப்பட்டன. | தாபன விதிக்கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பந்திகளின் பிரகாரம் தவணை கடந்த உத்தியோகத்தர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவிடப்பட வேண்டிய மீதிகள் தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களிற்கு நினைவூட்டல்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அறவிடப்பட முடியாதவையாக பரிந்துரை செய்யப்பட்ட முற்பண மீதிகளை பதிவளிப்பதற்கு பொதுத் திறைசேரிக்கு குறிப்பிடப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பிரதான நோக்கங்களிற்கு புறம்பான செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இலங்கை வான்படைக்குரிய பௌதீக, மனித மற்றும் நிதி வளங்களைப் பயன்படுத்தி தனியார் கம்பனி ஒன்றாக அதனால் முகாமை செய்யப்படும் ஹெலி ருவர்ஸ் லிமிட்டட் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான 10 ஆண்டுகளின் போது ரூபா 57.4 மில்லியன் கூட்டுத்தொகையான இலாபத்தை உழைத்திருந்தது. எனினும் இலங்கை வான்படையால் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலீடுகள் மீது வருமானம் எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை. | இலங்கை வான்படைக்கு போதுமானளவு திரும்பலை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கம்பனியின் பங்குரிமை தொடர்பான விடயங்கள் பொதுத் திறைசேரியுடன் கலந்துரையாடப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான தீர்மானத்தின் பிரகாரம் அமுல்ப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆம் ஆண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மொத்த செயன்முன்னேற்றம் 99 சதவீதமாக காணப்பட்ட போதிலும் பெறுகைத் திட்டத்தின் செயன்முன்னேற்றம் 66 சதவீதமாக காணப்பட்டது. உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் அமுல்ப்படுத்தல் செயன்முன்னேற்றம் 91 சதவீதமாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயன்முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்ட பின்னர் திருப்திகரமான செயன்முன்னேற்றத்தை அடைந்துகொள்வது அவசியமாகும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

**3.3 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இலங்கை வான்படையால் மோட்டார் கார்கள் மற்றும் வான்களை கழுவும் நோக்கத்திற்காக 2018 செப்தெம்பர் 20 இல் ரூபா 65.41 மில்லியன் பெறுமதியான 02 கழுவும் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. உரிய 02 இயந்திரங்களும் 2,534 வாகனங்களிற்காக பயன்படுத்தப்பட்ட பின்னர் கணக்காய்வுத் திகதியான 2019 ஒக்தோபர் 01 இல் 08 மாதங்களிற்கு மேலாக பயன்பாடற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ் இயந்திரங்களின் பெறுகையின் போது குறிப்புரையில் குறிப்பிடப்பட்ட Pre Washing Plant உதிரிப்பாகங்களிற்குப் பதிலாக வேறு உதிரிப்பாகங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் கேள்விப் பெறுமதியிலிருந்து ரூபா 356,000 கழிக்கப்பட்ட பின்னர் அவை மீதான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 6,000 வாகனங்களின் பயன்பாட்டிற்காக சுத்தப்படுத்தும் பொருட்களை வழங்குவதற்கு இணங்கப்பட்டிருந்த போதிலும் வழங்கப்பட்ட சுத்தப்படுத்தும் பொருட்கள் 2,534 வாகனங்களின் பயன்பாட்டிற்காக மாத்திரமே போதுமானவையாக காணப்பட்டன. | வழங்குநரால் இணங்கப்பட்டவாறு 6,000 வாகனங்களின் பயன்பாட்டிற்குத் தேவையான சுத்தப்படுத்தும் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் உள்ளூர் வழங்குநரிடமிருந்து தேவையான சுத்தப்படுத்தும் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். | 6,000 வாகனங்களை கழுவுவதற்குத் தேவையான சுத்தப்படுத்தும் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதுடன் உத்தரவாதக் காலப்பகுதி காலாவதியான பின்னர் உள்ளூர் வழங்குநர்களிடமிருந்து சுத்தப்படுத்தும் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான படிமுறைகள் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கட்டுநாயக்கா மற்றும் ஹிங்குராங்கொட தள முகாமில் 2019 நவம்பர் 20 ஆம் திகதியளவில் ரூபா 25.76 மில்லியன் பெறுமதியான 61,327 மீற்றர் Material drill khaki - (8325001050) துணிகள் 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பெறுகையை மேற்கொள்வதற்கு முன்னர் தேவைப்பாட்டை இனங்கண்டு உத்தம மட்டத்தில் இருப்புக் கட்டுப்பாட்டு முறைமையை பேணுதல் அவசியமாகும். | உரிய இருப்பிலிருந்து காற்சட்டை மற்றும் கோட் தைப்பதற்கு அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன் மிகுதி இருப்புக்கள் 2021 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட பின்னர் முடிவடையும் என அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை வான்படையின் உணவு கூடத்தில் பரிமாறுகின்ற ஊழியர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட ஒவ்வொன்றும் ரூபா 1,475 ஆன ரூபா 1.36 மில்லியன் பெறுமதியான வெள்ளை நிற சேட்டுகள் (84905002030) மற்றும் 12,139 மீற்றர் வெள்ளை நிற ரீசேட் துணிகள் என்பன 2019 நவம்பர் 03 இல் உள்ளவாறு குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதில் 195 மீற்றர் வெள்ளை நிற ரீசேட் துணிகள் அவற்றின் நிறம் குறைவடைந்தமை காரணமாக பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தன. | வருடாந்த நுகர்வு சரியாக இனங்காணப்பட்ட பின்னர் பெறுகை மேற்கொள்ளப்பட வேண்டும். | இது அடுத்த ஆண்டுகளிற்கு வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதென அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | (i) திருத்தும் நோக்கங்களிற்காக வெளிநாடுகளிற்கு 2004 தொடக்கம் 2013 வரையான காலப்பகுதியின் போது அனுப்பப்பட்ட விமானங்களின் 38 உதிரிப்பாக பொருட்கள் மற்றும் 2016 ஆம் ஆண்டில் அனுப்பப்பட்ட 7 பொருட்கள் என்பன இலங்கை வான்படைக்கு திரும்பவும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வெளிநாடுகளிற்கு அனுப்பப்பட்ட உதிரிப்பாகங்களை திரும்பவும் கொண்டுவருவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெளிநாடுகளிற்கு அனுப்பப்பட்ட 5 பொருட்கள் கொண்டுவரப்பட்டுள்ளதுடன் ஏனைய பொருட்களை கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ii) வழங்கப்பட்டிருக்காத மற்றும் மெதுவாக அசையும் 442 இருப்பு வகைகளிற்குரிய 27,541 பொருட்கள் ஊ-பொருள் வகையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. | இருப்புக்கள் தொடர்பாக ஏனைய முகாம்களிற்கு அறிவிக்கப்பட்ட பின்னர் பயன்படுத்தப்பட வேண்டும். | களஞ்சியங்களின் இருப்புக்கள் அசைவற்ற களஞ்சியங்களிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் 225 இருப்பு வகைகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன என அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) கட்டுநாயக்கா தள முகாமில் உள்ள திருத்தம் செய்யும் வளாகங்களில் 2019 நவம்பர் 05 இல் உள்ளவாறு 31 பாதுகாவலர் வாகனங்கள் விளைவற்றிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அவற்றில் 16 வாகனங்கள் 02 ஆண்டுகள் தொடக்கம் 08 ஆண்டுகள் வரையான காலவீச்சிற்கு மேலாக காணப்பட்டன. மேலும் 145 ஏனைய வாகனங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் 25 வாகனங்கள் 04 ஆண்டுகளிற்கு மேலாக காணப்பட்டன. பயன்படுத்தப்பட முடியாத 84 வாகனங்கள் 01 ஆண்டிற்கு மேலாக கைதவிர்ப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் கைதவிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பழுதடைவதற்கு முன்னர் வாகனங்களை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் திருத்தம் செய்ய முடியாத வாகனங்களை உடனடியாக கைதவிர்ப்புச் செய்ய வேண்டும். | தேவையான உதிரிப்பாகங்களை பெற்றுக்கொள்வதன் மூலம் திருத்தம் செய்வதற்கான படிமுறைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் பயன்படுத்தப்பட முடியாத வாகனங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 3.5 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 271/2019 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல்கள் கூற்றின் பிரகாரம் 05 ஆண்டுகளிற்கு குறைவான 205 நிகழ்வுகள் தொடர்பான ரூபா 815.62 மில்லியன் தொகை, 05 ஆண்டுகளிற்கும் 10 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட 19 நிகழ்வுகள் தொடர்பான ரூபா 122.03 மில்லியன் தொகை மற்றும் 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட 28 நிகழ்வுகள் தொடர்பான ரூபா 17.53 மில்லியன் தொகை உள்ளடங்கிய 252 | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவீடு செய்வதற்கு, பதிவழிப்பதற்கு அல்லது விட்டுவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | நிகழ்வுகளிற்குரிய ரூபா 955.18 மில்லியன் கூட்டுமொத்த தொகை அறவீடு செய்யப்படுவதற்கு, பதிவழிப்பதற்கு அல்லது விட்டுவிடுவதற்காக காணப்படுகின்ற நட்டங்களாக அறிக்கையிடப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | ගුවන් 5078 ஆம் இலக்க டிரக் வாகனத்தின் எஞ்சினை திருத்தம் செய்வதற்காக 2009 நவம்பர் 20 இல் கூறுவிலைகள் கோரப்பட்ட பின்னர் நிறுவனமொன்றிற்கு ரூபா 0.16 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. உரிய எஞ்சின் திருத்தம் செய்யும் நோக்கத்திற்காக 2010 யூன் 21 இல் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் முகாமிற்கு ரூபா 1.34 மில்லியன் பெறுமதியான எஞ்சினை கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெளித்தரப்பினர்களிற்கு திருத்தம் செய்யும் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட உதிரிப்பாகங்களை இயன்றளவு விரைவாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நட்டங்களிற்கு பொறுப்பான தரப்பினர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களிடமிருந்து உரிய நட்டங்களை அறவீடு செய்வதற்கு பரிந்துரை மேற்கொள்ளப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | விமானத் தரிப்பிட நோக்கத்திற்காக சீனக்குடா அக்கடமியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிர்மாணங்களின் போது கொங்கிறீட் சாய்வுதளம் (slab) 2009 ஆகஸ்ட் 24 இல் இடிந்து விழுந்திருந்ததுடன் இலங்கை வான்படை இந் நிர்மாணங்களை மேற்கொள்ளுகின்ற கம்பனிக்கு இரும்பு மற்றும் முற்பணங்களை வழங்கியிருந்தது. இது தொடர்பாக இலங்கை வான்படைக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 30.95 மில்லியனாகும். இந் நட்டம் இதுவரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பான தரப்பினர்கள் நட்டங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீதிமன்ற விசாரணை அறிக்கைகள் பாதுகாப்பு அமைச்சிற்கு குறிப்பிடப்பட்டிருந்தன. உரிய கம்பனியை கறுப்புப் பட்டியலில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | Radar Receiver மற்றும் Antenna Scanner என்பன திருத்தம் செய்யும் நோக்கங்களிற்காக 2015 ஆம் ஆண்டில் வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்டு விமானப் போக்குவரத்தின் போது காணாமல் போயிருந்ததன் காரணமாக இலங்கை வான்படைக்கு ரூபா 98.69 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. அவை தொடர்பாக காப்புறுதி மேவுகையொன்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததால் நட்டங்களிற்கு பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து நட்டத்தில் ரூபா 493,438 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 112,888 தொகை மாத்திரமே 2019 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு அறவீடு செய்யப்பட்டிருந்தது. | உரிய கம்பனியிடமிருந்து நட்டத்தை அறவீடு செய்வதற்கும் அக் கம்பனியை கறுப்புப் பட்டியலில் இடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் திருத்தம் செய்யும் நோக்கங்களிற்காக வெளிநாடுகளிற்கு பொருட்களை அனுப்புவதற்கு முன்னர் காப்புறுதி மேவுகை பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | உரிய உத்தியோகத்தரின் சம்பளத்திலிருந்து குறித்த தொகை அறவீடு செய்யப்பட்டிருந்ததுடள் முழுத் தொகையும் 2023 ஆம் ஆண்டளவில் அறவீடு செய்யப்படும். |
| (உ) | இலங்கை வான்படையால் 2009 ஆம் ஆண்டில் 02 வழங்குநர்களிடமிருந்து 187 சூரிய மின்சக்தி வீதி விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 19.94 மில்லியன் பெறுமதியான 148 வீதி விளக்குகள் அந்நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட முடியாதிருந்தன. நட்டங்களிற்குப் பொறுப்பான இரண்டு தனியார் கம்பனிகளிடமிருந்து உரிய நட்டங்கள் அறவீடு செய்யப்பட முடியாதிருந்தன. | பொறுப்பான தரப்பினர்கள் நட்டங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த கம்பனி செயற்பாடற்றிருந்ததன் காரணமாக அக் கம்பனியின் தாய்க் கம்பனியிடமிருந்து நட்டங்களை அறவீடு செய்வதற்கு சட்டமா அதிபர் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென அறிவிக்கப்பட்டிருந்தது. |

4. **மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை வான்படையின் தொழிற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 40,505 ஆக காணப்பட்டதுடன் சிரேஷ்ட மட்டத்தில் 50 வெற்றிடங்களும், மூன்றாம் மட்டத்தில் 441 வெற்றிடங்களும், இரண்டாம் மட்டத்தில் 2,070 வெற்றிடங்களும், ஆரம்ப மட்டத்தில் 830 வெற்றிடங்களும் உள்ளடங்கலாக மீளாய்வாண்டின் இறுதியில் 3,455 வெற்றிடங்கள் காணப்பட்டன. மேலும் மீளாய்வாண்டிற்காக இலங்கை வான்படையால் தனிப்பட்ட வேதனாதிகள் குறியீட்டின் கீழ் ரூபா 28,170 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க தனியாளொருவரிற்கான செலவினம் ரூபா 397,640 ஆக காணப்பட்டது. | வான்படை மற்றும் ஏனைய தரவரிசை உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |